அவர்களால் முன்மொழியப்பட்டு, இங்கே விவாதிக்கப்படுகின்ற கவர்னர் உரை விவாதத்தில் நன்றாகக் காணலாம். அந்த உரையிலே இருக்கிறது. ஆந்திர மாநில முதல்வர் திரு. சென்னா ரெட்டி அவர்களுக்குக் கூட பாராட்டு தெரிவித்து அவர்கள் தெலுங்கு கங்கைத் திட்டத்திலே நிச்சயமாக உதவுவார்கள் என நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் என்பதற்காகப் பாராட்டு தெரிவித்திருக்கிறோம். திரு. பெ. சு. திருவேங்கடம் அந்த வரியை மாத்திரம் படிக்காமல் முன்மொழிந்து நன்றி கூறிப் பேசியிருக்கிறார் என்பது தெரிகிறது.

திரு. எம். முத்தையா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மக்கள் அவர்களுடைய எல்லையைக் கடந்து தமிழ்நாட்டிற்கு தண்ணீர் விடுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார் கள் என்பது உண்மையா? அதைப் பற்றி அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்புகள் எதுவும் அரசிடம் இல்லை. அப்படி தனிப்பட்ட புகார்கள் இருக்குமானால் அதைக் குறித்தும் இப்போது இருக் கிற அரசுடன் இந்த அரசு பேச்சுவார்த்தைகள் நடத்தும் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. ஆர். அண்ணாநம்பி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தெலுங்கு கங்கை திட்டம் முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்த திட்டம். இந்த நல்ல திட்டத்தை இன்றைய முதல்வர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த திட்டம் எப்போது முடிவடையும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பிருந்த அரசு கொண்டு வந்த திட்டம் என்பதற்காக நாங்கள் எந்த திட்டத்தையும் கைவிட்டுவிட மாட்டோம்.

(10.15 மணி)

பேராவூரணி பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்.

*203—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டிட வேலை எப்பொழுது ஆரம்பிக்கப் படும்?

1990 சனவரி 22]

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நகர் ஊரமைப்பு வாரியக் குழு கூட்டத்தில் இப்பொருள் பற்றி விவாதிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் 3—7—1989ல் வழங்கப் பட்டு விட்டது. பொதுப்பணித்துறையின் தொழில்நுட்ப அனுமதி பெற்ற வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் பேராவூணி பேரூராட்சி நிர்வாக அதிகாரியிடமிருந்து பெறப்பட்டபின்னர் நிதி விடு விக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து நிலையக் கட்டிடத்தின் மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு ? எப்போது வேலை துவங்கப்படும் ? அதற்கான ஆயத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டனவா ? சுமார் 2 ஆண்டுக் காலமாக பணிகள் தாமதப்படுத்தப்படுகிறதே, அரசு அப்பணிகளை விரைந்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்து நிலையம் அமைப்பதற்கு பேரூராட்சியின் அறிக்கையின்படி, தற்போது வாரச் சந்தை யுள்ள இடத்தில் 1.74 ஏக்கர் இடத்தில் 20 லட்சம் ரூபாய், மதிப்பீட்டில் அதனை உருவாக்க வேண்டுமென்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பரிந்துரை செய்யப்பட்டு, இந்தப் பரிந்துரை அரசுக்கு 6—2—1989 அன்றுதான் வரப் பெற்றிருக்கிறது. இதற்கு அனுமதி தற்போது வழங்கப்பட்ட நிலைமையில் அந்த மதிப்பீட்டுத் தொகையும், வரைபடமும் நிர்வாக அதிகாரி மூலமாக வரப்பெற்ற உடன் இந்த வேலை நிச்சயமாக தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6—2—1989 என்று சொன்னால் சுமார் ஓராண்டு ஆகிறது. அப்ரூவல் செய்ய ஓராண்டு என்றால் வேலைத் துவங்க எத்தனை ஆண்டுகள் ஆகும் ? அநேகமாக இரண்டாயிரத்தி லாவது இந்த வேலை முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான திட்ட மதிப்பீடும், உரிய வரைபடமும் இன்னும் அந்த நிர்வாக அதிகாரியால் அனுப்பப் படவில்லை. அது வந்த உடனே விரைவிலே அந்தப் பணம் விடுவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உடுக்குறியிட்ட வினாக் கள்—விடைகள் முடிவுற்றன.